## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்- 2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறப்பான கணக்கீட்டு நடைமுறைகள்

பின்வரும் சிறப்பான கணக்கீட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தும் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 22,266,722 கிரயமான 13 சொத்துக்களை மீள் கணிப்பீடு செய்து அப்பெறுமதியை கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்திற்கு எதிராக ரூபா 500,000 தொகை நட்டஈடு கோரி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நந்தன மாவத்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 698,098 பெறுமதியான வாகன கராஜ், நிலையான சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படாமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையின் பெறுமதி அப்

பெறுமானத்தினால் அதிகரித்தும் உரிய சொத்துக் கணக்கில் அப் பெறுமானத்தினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குரிய வான் வாகன விற்பனையால் பெறப்பட்ட ரூபா 2,359,975 தொகை மூலதன ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டு வான் விற்பனையால் பெறப்பட்ட பணத்தில் ரூபா 1,995,000 தொகை செலவில் லொறியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி மூலதன ஒதுக்குக் கணக்கிலிருந்து அகற்றப்படாமையின் காரணமாக ரூபா 1,995,000 இனால் மூலதன ஒதுக்கக் கணக்கு அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. லொறி கொள்வனவு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 364,975 தொகை 2011 மே 06 ஆம் திகதிய திறைசேரிச் செயலாளரின் பீஎப்/எப்எஸ்/ஏ/வீஈஎச்ஜ/2011 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் பிரகாரம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2013 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்குரிய பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 94,765 தொகை நிதிக்கூற்றுக்களில் அட்டுறு செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அலுவலக உபகரணங்கள் கணக்கில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 512,402 தொகை பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 702,069 தொகை பெறமானத் தேய்வாகக் காண்பிக்கப்படாமையினால் ரூபா 189,667 இனால் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுக் கணக்கு அதிகமாகவும், நிலையான சொத்துக் கணக்குகள் மற்றும் வருடாந்த பற்றாக்குறை என்பன அப் பெறுமானத்தினால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) ஆராய்ச்சிச் செயற்பாட்டிற்குரித்தற்ற ரூபா 1,243,560 தொகையான 04 வகையான செலவினங்கள் ஆராய்ச்சிச் செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விடயம் | பட்டோலையின் பிரகாரம் தேறிய பெறுமதி | | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|---|
| (அ) | கட்டிடம் | 164,662,606 | (i) | மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| (ஆ) | அலுவலக உபகரணம் | 2,334,252 | (ii) | விரிவான பட்டோலை |
| (இ) | கற்பித்தல் உபகரணம் | 815,296 | | விரிவான பட்டோலை |
| (ஈ) | இயந்திரமும் பொறியும் | 680,375 | | |
| (உ) | கருவியும் உபகரணமும் | 1,335,550 | | |
| (ஊ) | தளபாடங்களும் உபகரணங்களும் | 9,461,991 | | |
| (எ) | கணணி வன்பொருட்கள் | 5,783,352 | **(i)** | விரிவான பட்டோலை |
| (ஏ) | கணணி மென்பொருட்கள் | 81,414 | (ii) | கணணி நிலையான சொத்துப் பதிவேடு |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| நி.பி 104 | பல்கலைகழகத்திற்குரிய 02 வாகனங்கள் 03 சந்தர்ப்பங்களின் போது விபத்துக்குகளுக்கு உள்ளாகியமையால் ஏற்பட்ட ரூபா 290,164 |

தொகையான நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுற்றுநிரூப ஏற்பாடுகள்**

| | |
|---|---|
| 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (IV) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிரூபம் மற்றும் 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிரூபம் | சுற்று நிரூபத்தின் பிரகாரம் உயர் கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி பல்கலைக்கழகத்தின் வண. மகோபாத்தியாய அவர்களினால் தமக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் எல்லையான 225 லீற்றரை விஞ்சி மீளாய்வாண்டின் போது 1016 லீற்றருக்காக ரூபா 169,123 பெறுமதியான எரிபொருள் பெறப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 25,060,055 ஆன பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையாக ரூபா 14,853,726 ஆகக்காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சி ரூபா 10,206,329 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 25,060,055 பற்றாக்குறையாக இருந்த போதிலும் மீண்டுவரும் செலவுக்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 83,512,127 தொகையிலிருந்து பல்கலைக்கழகத்தின் நிதி வெளிச் செல்லும் ஆண்டின் செலவுகளை மேற்கொண்டதன் பின்னர் ரூபா 6,217,326 பற்றாக்குறையாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்ட நிலையான சொத்தின் பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு ரூபா 19,971,415 தொகையும், பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஏற்பாடு ரூபா 1,206,694 தொகையுமாக பல்கலைக்கழகத்தின் நிதி வெளியே

செல்லாத செலவினங்கள் ரூபா 21,178,109 கூட்டுத்தொகை மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறைக்கான காரணியாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் நிதி வெளியே செல்லாத செலவினங்கள் ரூபா 1,292,367 தொகையினால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதிகரித்தமைக்கான காரணமாக இருந்தது.

## 2.3 நிறுவனத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்

2011 யூன் 09 ஆந் திகதி பல்கலைக்கழகத்தின் வாகனத்தினால் வெளித் தரப்பினருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக ரூபா 500,000 இழப்பீடு கோரி இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது

## 2.4 செலவினங்களில் அசாதாரண அதிகரிப்பு

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் போது 07 செலவின விடயங்களுக்காக செலவினங்களைக் செய்யும் போது அசாதாரண அதிகரிப்புக் காணப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவின விடய விபரம் | 2012 இல் உள்ளவாறான செலவினம் | 2011 இல் உள்ளவாறான செலவினம் | அதிகரிப்பு | அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக நுகர்வுப் பொருட்கள் | 1,358,901 | 710,278 | 648,623 | 91 |
| எரிபொருள் மற்றும் எண்ணெய் | 1,480,777 | 750,802 | 729,975 | 97 |
| உபகரணங்கள் மற்றும் வாகனங்களின் சிறு பழுதுபார்த்தல்கள் | 1,692,137 | 862,960 | 829,177 | 96 |
| கட்டிட பராமரிப்பு | 473,736 | 147,126 | 326,610 | 221 |
| உபகரணப் பராமரிப்பு | 662,225 | 404,304 | 257,921 | 64 |
| அச்சிடல் மற்றும் | 1,071,459 | 361,738 | 709,721 | 196 |

| | | | | |
|---|---|---|---|---|
| அறிவித்தல் | | | | |
| நடவடிக்கைகள் | | | | |
| பூங்கா பரமரிப்புச் சேவை | 4,113,867 | 2,808,714 | 1,305,153 | 46 |
| | ---------------- | ---------------- | ---------------- | |
| | 10,853,102 | 6,045,922 | 4,807,180 | |
| | ====== | ====== | ====== | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தில் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சர்வதேச பௌத்த மாநாட்டின் ஆரம்ப உரைக்காக சமூகமளித்த அமெரிக்க பல்கலைக்கழகத்தில் சேவையாற்றுகின்ற விரிவுரையாளருக்கு விமானப் பயணச்சீட்டுக் கட்டணமாக ரூபா 169,614 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 385(1) இற்கு முரணாக காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்படாமல் விரிவுரையாளரின் தனிப்பட்ட பெயரில் ரூபா 169,602 தொகை காசாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சும் செயலாளரின் 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிரூபத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் விமானச் சீட்டுக்கள் கொள்வனவு செய்தல் அரசாங்க வங்கிகளின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கம்பனிகளிலான பீ.ஓ.சீ ட்ரவல்ஸ் (பிரைவட்) லிமிடெட் மற்றும் பீபல்ஸ் ட்ரவல்ஸ் (பிரைவட்) லிமிடெட் போன்ற கம்பனிகளின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக கூறுவிலைகள் கோரப்படாமல் தனியார் நிறுவனத்தின் விலையின் அடிப்படையில் ரூபா 169,614 தொகை விமானச் சீட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட சுற்றுநிரூபத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான பீபல்ஸ் ட்ரவல்ஸ் தனியார் கம்பனியால் அதற்குரிய விலை ரூபா 156,700 ஆனமையால் பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 12,914 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 264(1) இன் பிரகாரம் மேற்கூறப்பட்ட கொடுப்பனவிற்குரிய விமானச் சீட்டின் அடியிதழ், விமானப் பிரயாண அனுமதிப்பத்திரத்தின் பிரதி அல்லது வேறு எழுத்து மூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) நிருவாகக் கட்டிட நிர்மாணம்

(i) பிரதான நிருவாகக் கட்டிடத்தின் நிர்மாண ஒப்பந்தம் நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் நிலையியல் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கீகரித்த கூறு விலைகளின் அடிப்படையில் வடிவமைப்பு மற்றும் நிர்மாண அடிப்படையில் (Design and Built basis on the rates approved by the standing Technical Committee of the Ministry of Construction and Engineering Services) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிப்பதற்கு அமைச்சரவையினால் 2008 யூன் 17 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் சமர்ப்பித்த ரூபா 83,338,055 தொகையான மதிப்பீடு நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் நிலையியல் தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவிற்குச் (standing Technical Committee) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பீடுகளில் கூறு விலைகள் (Rates) திருத்தப்பட்டு ரூபா 68,062,631 தொகைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 83,338,055 தொகையான அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையினால் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கீகரித்த விலையினை விட ரூபா 15,275,424 அதிகரித்த தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த ஒப்பந்தம் 2010 யூன் 16 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன்

இறுதி விலைப்பட்டியல் தவிர்ந்த ரூபா 72,507,363 தொகை உரிய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் நிலையியல் தொழில் நுட்ப மதிப்பீட்டு குழு இந்த நிர்மாணங்களை ரூபா 68,062,631 தொகைக்கு திருத்தி அங்கீகரித்தமையினால் இது வரையிலும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 4,444,732 ஆகும்.

(iii) ஒப்பந்தம் 2010 யூன் 16 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.2 வழிகாட்டியின் பிரகாரம் வேலைப் பூர்த்தி அறிக்கை உறுதிப்படுத்தல் உரிய ஆலோசனை நிறுவனத்திலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மொழிக் கற்கைப் பீடக் கட்டிட நிர்மாணம்**

---

மொழிக் கற்கைப் பீடக் கட்டிட நிர்மாண ஒப்பந்தம் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிப்பதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

"அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகளில் போட்டியானது என நிர்மாணப் பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் நிலையியல் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு அந்த விலையில் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குக் கையளித்தல்"

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் செயலாளரினால் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சின் படி அந்த ஒப்பந்தம் ரூபா 213,000,000 தொகையில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிப்பதற்கு அங்கீகாரம்

வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 275,233,521 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ஆரம்ப வேலைக்காக (Preliminary) ரூபா 1,996,850 தொகையான கொடுப்பனவை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கீகரிக்காதிருந்ததுடன் அந்த விடயங்கள் இலாபத்தன்மையானது என வெளிப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த விடயத்திற்காக ரூபா 213,833 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) மதிப்பீட்டுப் பெறுமதியில் ஒப்பந்தத்தை வழங்கியமையின் காரணமாக வேலை ஆரம்பிப்பு முற்பணம் மற்றும் அதற்குரிய பெறுமதி சேர் வரி என்பன ரூபா 14,013,888 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாணப் பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் செயலாளரின் 2011 திசெம்பர் 19 ஆந் திகதிய 4/2/5/265 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆலோசனைச் சேவைக் கட்டணம் (Consultancy fee) நிர்மாண வேலை மற்றும் பொது ஒதுக்கங்களுக்குரிய தொகையில் (building works and Provisional Sum) 4 சதவீதம் மாத்திரம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் மொத்த மதிப்பீட்டில் 4 சதவீதமாக ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 78,131 தொகையான ஆலோசனைக் கட்டணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) நீர் வழங்கல் முறைமையினை நிர்மாணித்தல்**

நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் நீர்க்களஞ்சிய தாங்கி (Over hand tank) நிலக் கீழ் நீர்த்தாங்கி (Sump) மற்றும் பம்பிக் கூடம் (pump house) என்பவற்றை நிர்மாணிப்பதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 11,868,561 தொகை மதிப்பீட்டுப் பெறுமதிக்கு தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சின்றி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிப்பதற்கு இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்தது. அந்த செயற்திட்டத்தின் மதிப்பீடு தயாரித்தல், நிர்மாணம் மற்றும் ஆலோசனைச் சேவைகளை உள்ளடக்கிய

சகல செயற்பாடுகளும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் கீழே குறிப்பிடப்படுகின்றதன் பிரகாரம் கல்விசார் பதவியணியினரில் 11 பதவியியணியினர் கல்விசாரா பதவியணியினரில் 13 பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்பட்டன.

### (அ) கல்விசார் பதவியணியினர்

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| (i) | வண.மகோபாத்தியாய | 01 | 01 | - |
| (ii) | பேராசிரியர் | 04 | 01 | 03 |
| (iii) | விரிவுரையாளர் | 29 | 26 | 03 |
| (iv) | சிரேஷ்ட உதவி நூலகர் | 01 | - | 01 |
| (v) | தற்காலிக விரிவுரையாளர் | 05 | 02 | 03 |
| (vi) | கணணி ஆலோசகர் | 01 | 01 | - |
| (vii) | ஆங்கில ஆலோசகர் | 02 | 02 | - |
| (viii) | பௌத்த ஆலோசகர் | 01 | --- | 01 |
| | | 44 | 33 | 11 |

### (ஆ) கல்விசார் பதவியணியினர்

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| (i) | பதவி நிலை | 11 | 07 | 04 |
| (ii) | பதவி நிலையற்ற | 32 | 27 | 05 |
| (iii) | சிற்றூழியர் | 27 | 23 | 04 |
| | | 70 | 57 | 13 |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கொள்வனவுத் திட்டம்

பல்கலைக்கழத்தின் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்த தேவைகள் முன்னரே தீர்மானிக்கப்பட்டு அதன் பிரகாரம் தேவையான அளவுகளைக் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாது கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 4.2 ஆண்டறிக்கையினை சபைக்குச் சமர்ப்பித்தல்

2010 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2012 மே 20 ஆந் திகதி பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது வண.மகோபாத்தியாய அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிருவாகம்
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) மனித வள முகாமைத்துவம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு